உ

வேலுமயிலுந்துணை.

ஸ்ரீசுப்ரமணிய சுவாமிபேரிற்

காவடிச்சிந்து.

இஃது கருவைநல்லூர்க்கு அடுத்த

சென்னிகுளத்திலிருக்கும் ம-ள-ள-ஸ்ரீ வித்வான்
அண்ணாமலைரெட்டியாரவர்களியற்றியது.

926.417 N10

சென்னை-சூளை

எஸ். பி. இராஜாராம்

அவர்களாற்றமது

ஸன் ஆப் இண்டியா பிரஸ்ஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

தற்கால வைத்தியபோதினி,

அநேக வைத்தியர்களால் கையாளப்பட்டு வருகின்ற பாகங்களைமாத்திரம் 15-அத்தியாயங்களாகப் பிரித்துத் தற்கால வைத்தியபோதினி என்கிற பேரிட்டு எழுதி ஒருநூல் அச்சிட்டிருக்கின்றனன். ஆனல் இந்தநூலில் சொல்லியபடியே விபரீதமான அர்த்தஞ்செய்துகொள்ளாமல் சரியானமாதிரி செய்து பார்த்தால் அவ்வம் மருந்துகளுக்குச் சொல்லியுள்ள வேலைகளைக் கட்டாயம் செய்தேதீரும். இதற்குச் சந்தேகமேயில்லை. உயர்ந்தபதிப்பு. கிளேஸ்கடிதம்.

இதன் விலை அணா-8. வி.பி.சார்ஜ் அணா-2.

மனோரஞ்சனி,

பெண்களின் கற்புநிலையினாலுண்டாகும் ஏற்றமும், செல்வம் தரித்திரமென்னும் இரண்டும் சகடக்கால் போல்வதென்றும், ஒவ்வொருவரும் தெய்வவருளைப்பெற முயற்சிக்கவேண்டுமென்பதும், ஆசைக் கடிமையாதல்கூடாதெனவும், பேராசையின் தாழ்மையும், நல்லறிவாலடையும்நன்மையும், யோக்கியதையைப்பற்றிய பிரசங்கமும், முயற்சி எந்நாளும் நன்மையையே பயக்குமென்பதும்ஞானிகளின் தரிசன விசேடமும், சௌரியத்தின் ஏற்றத்தாலுண்டாகும் சிறப்பும் கல்வியினால் ஒருவன் எய்தும் பயனும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா-12. வி-பி-சார்ஜ் அணா-3.

பிருஹஜ்ஜாதகமென்னும்

மங்களேஸ்வரியம்.

ஆதியில் இந்தப் 'பிருஹஜ்ஜாதக' மானது சோதிட பரமாசாரியர்களில் ஒருவராய் விளங்கியிருந்த வராஹமிகிராசாரியர் என்பவரால் வடமொழியில் சுலோகரூபமாகத் திருவாய் மலர்ந்தருளப்பட்டது. இதற்கு ஆந்திரபாஷையில் வசனரூபமாக சோதிட சிரோமணியாகிய திருவேங்கடாசாரியர் என்பவர் ஓர் உரை யியற்றியுள்ளார் இவ்விரண்டையுந் தழுவி திருமலைராயன்பட்டணம் சோதிட - வயித்தியலிங்க பத்தரவர்களால் நந் தமிழ்நாட்டுச் சோதிடர்களுக் குதவுமாறு பரோபகாரமாகத் தமிழில்பாட்டும்உரையுமாக மொழி பெயர்க்கப்பட்டது.

இது சில அற்பசோதிடர்கள்பாடும் சோதிடபுத்தகங்களைப் போன்றதென்று ஐயமடைய வேண்டாம். இஃது மகாசோதிட சாஸ்திரங்களி லொன்று, மேலும் ஓராசாரம், பாராசாரியம் முதலிய சோதிட சாஸ்திரங்களுக்கு இணையானதும் கற்றவரும் மற்றவருமான எல்லாச் சோதிடர்களும் கையாளத்தகுந்தது. இச்சாஸ்திரம் முற்காலத்ததாயும், மகாசிரேஷ்டமானதாயு மிருப்பதால் இதனுண்மை பரம்பரையான சோதிடர்களுக்கு [illegible]

14968

உ

வேலுமயிலுந்துணை.

ஸ்ரீசுப்ரமணியசுவாமிபேரிற்

காவடிச்சிந்து.

இஃது

கருவைநல்லூர்க்கு அடுத்த
சின்னிகுளத்திலிருக்கும் மஹாவித்வான்
அண்ணாமலைரெட்டியாரவர்களியற்றியது

மதுரை.
த.குப்புசாமிநாயுடு அவர்களால்
சீர்திருத்தப்பட்டது.

சென்னை-சூளை

எஸ். பி. இராஜாராம்

அவர்களாற்றமது
ஸன் ஆப் இண்டியா பிரஸ்ஸிற்
பதிப்பிக்கப்பட்டது.

1910.

நெ-14. ஆரிமுத்து மேஸ்திரிதெருவு. சென்னை.

நூதன புத்தக விளம்பரம்.

பங்கஜவல்லிக்கதை.

புதுமையான இந்தத் தமிழ் நாவலை வாசிப்பதினால், கல்வி, நல்லறிவு, யோசனாசக்தி, உகைதந்திரமுதலிய பலநன்மைகள் உண்டாகு மென்பதில் யாதொரு தடையுமில்லை. பங்கஜவல்லி என்னும் இக்கதாநாயகி, சீமானாகியசித்தூர்-செல்வகேசவ முதலியாருடைய புதல்வி, இவள் கண்டோர் மையல் கொள்ளத்தக்க கட்டழகியா யிருந்ததோடு தமிழ்க்கடலை வாய்மடுத்துக் கலைமகளென விளங்கி இனிமையான 11-பிரசங்கங்கள் செய்தாள் அப்பதினொரு பிரசங்கங்களை படிக்கிறவர்கள் இங்கிலீஷ், பிரசங்கத்தையும், இங்கிலீஷ்காரரையும் புகழ்ந்து பேசமாட்டார்கள். பின்னர்ப் பங்கஜவல்லியின் கலியாணச் சிறப்பும் இவள் படுக்கையறையிற்சென்று தன்து நாயகனோடு பாசாங்கு செய்து, தன்குற்றத்தை மறைப்பதும் இருவர்க்கும் நடக்கும் சம்பாஷணையும் வெகு இனிமையைத் தராநிற்கும்

இதன்விலை அணா 8. வி-பி-சார்ஜ் அணா 2.

மோகனசுந்தரி.

உலகத்தில் மாற்றாந்தாயாக வருபவள், முதற்றாரத்தினுடைய மக்களைப் படுத்தும்பாடு இவ்வள வவ்வளவல்ல என்பதை அனுபவிகள் அறிந்தே யிருப்பார்கள் உலகத்தில் நடக்கும் மாற்றாந்தாயின் அக்கிரமத்தைப்பற்றியே இக்கதையில் எழுதியிருக்கிறது. இதன் விலை அணா 6. வி-பி. சார்ஜ் அணா 2.

சுந்தராங்கி,

இது நவீனமானதோர் தமிழ்நாட்டுக்கதை, அனேக நீதிபோதகங்களை யடக்கி வாசிப்பவர்கட்கு நீங்காத இன்பத்தைக் கொடுக்குந்தன்மையது, ஆதிமுதல் அந்தம்வரையில் மிகச் சாமானிய எளியதமிழ் வசனநடையில் எழுதப்பட்டிருப்பதால், சாமானிய படிப்பினையுடைய நம் பெண்மக்கள்கூட வாசிக்கலாம், ஆண்மக்கட்கும் இன்பத்தைத் தரவல்லது, இதன் விலை அணா 6.

வி-பி-சார்ஜ் அணா-2,

மைனாவதிக்கதை.

இக்கதை வாசிப்போரும் நற்புத்தியும் ஆசாரியபக்தியும் அரிய யுக்தியும் சாபானுக்கிரக சக்தியும் உண்டாகு மென்பதற்கு யாதொருதடையுமில்லை. இக்கதையின் பெருமையைப் பூரணமாகச்சொல்லில் மிகவும் விரிவாகிறபடியால் சுருக்கமாகவரையலாயிற்று. புத்தகம் 1-க்கு அணா 12. வி பி. சார்ஜ் அணா 3.

பெரிய கேட்லாக் வேண்டியவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

எஸ். பி. இராஜாராம் அண்டு கோ.

நெ. 14. ஆரிமுத்து மேஸ்திரி தெரு,

சூளைபோஸ்டு, மதராஸ்.

உ

வேலுமயிலுந்துணை.

இந்நூலாசிரியர்
ஷை பிரபந்தத்தை முதற்பதிப்பு அச்சியற்றும்படி
பொருட்சகாயஞ்செய்த
ஊற்றுமலைச் சமஸ்தானத்ததிபதி
ம-ா-ா-ஸ்ரீ,
இருதயாலயமருதப்பமகிபதி
யவர்கள்பேரி லியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

படங்கிடங் கர்ச்சனை புரியும்பயோதரங்கண் வளர்மாடப்பந்தி யும்போர், தொடங்கிடங்கர் தெலுங்கர்வங்கர் துளுவர் கருநாடருயிர் துடிப்புற் றோட, வுடங்கிடங்கர்க் குறம்பிறழ்பற் பேழ்வாயங்காப்பி னுட னுலாவு கின்ற, தடங்கிடங்கர் களுந்திகழூற் றுமலை மேவிய வா சராச ராஜன். (க)

தடங்கான கத்தனத்தி னெடுநெடங்தோன் பழவடியர் தமக்குத் தாய்க்கெண், மடங்கான கத்தனத்தி னகரனைப்போ ரிடை மறைத் தோன் மகரமுருங், கிடங்கான கத்தனத்தி நிகர்சுருபன் கோவிய ராங் கிளரும் வம்புக், கடங்கான கத்தனத்தியரைப்புணர்வீ ரைக்கட வுட்கதிக நேசன். (உ)

பெட்பரத னத்துடன்பொன் மலையிரண்டு பிறந்ததெனப் பெ ருத்துக் கச்சுக்,குட்பரத னத்துணைகள் புதைக்கவடங் காதுகிழித் துருவ வன்பாங், தட்பரத னத்துழற்கந் தரமடவா ரமிழ்துகைத்துத் தனது செவ்வாய்ப், புட்பரத னத்துறச்செ யிருதயாலப்பேரற்புதசு சீலன். (ங)

முல்லையப்பன் மானுமட மானினியர்க் கொருமதனன் முரணுந் தெவ்வை, வல்லையப்ப ரும்படைகொண் டடருமுத்து சாமிமன்னன் மகிழ்நேயன்பொற், சில்லையப்ப ளகிபுளகத் தனக்காந்தி மதிகொழு நன் றிருத்தாள் போற்று, நெல்லையப்ப கவிராஜ சிங்கதிறு வியவசீசு நிகேதனத்தில் (ச)

காவடிச்சிந் தனந்தரலில் விலைபகர்ந்தோன் மாவலிபார்நல்கென் றண்டர், தாவடிச்சிந் தனந்தமகன் மருகனென் றழைத்திடுகந் தன் றேமாரி, பூவடிச்சிந் தனந்தவனம் பொலிகமுகா சலபதமேற்பொரு ந்த [illegible]ஞ்சொல். காவடிச்சிந் தனந்தமச்சிற் பதிப்பிவித்துப் புகழ் முழுதுங் கைக்கொண் டானே. (ரு)

றச-
பிர்ச

உ

வேலுமயிலுந்துணை.

ஸ்ரீசுப்பிரமணியசுவாமிபேரிற்

காவடிச்சிந்து.

விநாயகர் துதி,

திருவுற்றிலகுமுங்கை வரையிற்புகழ்மிகுந்து
இகழத்தனமுறைந்த வாசனை மிகு
மகிமைச்சுகிர்ததொண்டர் நேசனைப் பல

தீயபாதககாரராகிய சூரர்யாவருமாளவேசெய்து
சிகரக்கிரிபிளந்த வேலனை யுமை
தகரக்குழல்கொள்வஞ்சி பாலனை.

மருவுற்றிணர்விரிந்து மதுபக்குலமுழங்க
மதுமொய்த்திழிகடம்ப வாரனை விக
சிதசித்ரசிகியுந்து வீரனை யெழில்

மாகநாககுமாரியாகிய மாதிஞேடுகிராதநாயகி
மருவப்புளகரும்பு தோளனை யெனை
யருமைப்பணிகொளுந்த யாளனை.

தெரிதற்கரியமந்திரமதனைத்தனதுதந்தை
செவியுட்புகமொழிந்த வாயனை யிள
ரவியிற்கதிர்சிறந்த காயனை யகன்

றேவநாடுகெடாதுநீடிய சேனைகாவலனாகவேவரு
திறலுற்றசிவகந்த நாதனை விரி
மறையைத்தொளிருகின்ற பாதனை

மருளற்றிடநினைந்து மனதிற்களிசிறந்து
மதுரக்கனிவுவந்து கூடவே பல
விதமுற்றிலகுகிந்து பாடவே விரி

வாரிநீரினைவாரிமேல்வரு மாரிநேர்தரு மாமதாசல
வதனப்பரிணிரண்டு தாளையே நம்
முதவப்பணியமிந்த வேளையே. (க)

உ-வது, வேறு சந்தம்.

சீர்வளர்பசுந்தோகை மயிலான் வள்ளி
செவ்விதழ[illegible]தினிய தெள்ளமுது மயிலான்

போர்வளர்தடங்கையுறு மயிலான் விமலப்
பொன்னடியை யின்னலற்வுன்னுதல்செய்வாமே.

குஞ்சரவனங்காவல் வீடா படி
கொஞ்சிமருவுஞ்சரசரஞ்சிதவி சேடா

பைஞ்சரவணங்காவல் வீடா வளரும்
பாலனென மாலையொடுகோலமிணைவாமே.

வல்லவுணர்வழியாதும் விட்டு வெருள
வன்சமர்செய்கந்தனிடம்வழியடிமைப் பட்டு

நல்லவுணர்வழியாது மட்டு மிஞ்சு
ஞானபரமானந்தமோனமடைவாமே.

ஒருதந்தமாதங்க முகத்தான் மகிழ
வுத்தமகனிட்டனெனவுற்றிடு மகத்தான்

வருதந்தமாதங்க முகத்தான் எவரும்
வாழ்த்துகுகநாயகனையேத்துதல் செய்வாமே. (உ)

௩-வது வேறு சந்தம்.

தெள்ளுதமிழுக்குதவு சீலன் றுதி
செப்புமருணைமலைக்கனு கூலன் வளர்
செழியப்புகழ்விளைந்தகழுகுமலைவளத்தைத்
தேனே சொல்லு வேனே.

வெள்ளிமலையொத்தபல மேடை முடி
மீதினிலேகட்டுகொடி யாடை யந்த
வெய்யவனடத்திவரும்துய்யவிரதப்பரியும்
விலகும் படி யிலகும்.

வீதிதொறுமாதிமறை வேதம் சிவ
வேதியர்களோதுசாம கீதம் அதை
மின்னுமலர்க் காவதனிற் றுன்னுடப்பூவையுடன்
விள்ளுங் கிள்ளைப் புள்ளும்.

சீதளமுகிற்குவமை கூறு நிறச்
சிந்துரங்கள்சிந்துமதத் தாறு முயிர்ச்

சித்திரவிகர்த்தமின்னார் குத்துமுலைக்குங்குமச்செஞ்
சேறுங் காத நாறும்.

நித்தநித்தமுங்கணவ ரோடுங் காம
லீலையிற்பிணங்கிமனம் வாடுங் கரு
நீலவிழியார்வெறுத்த கோலமணிமாலைரத்ன
நெருங்கு மெந்த மருங்கும்.

கத்தூடலொத்தகடை வீதி முன்பு
கட்டுதாளப்பந்தலின் சோதி யெங்கும்
காட்டுவதாலீரிரண்டு கோட்டுமதயானையிற்பல்
களிறும் நிறம் வெளிறும்.

முத்தமிழ்சேர்வித்வஜனக் கூட்டம் கலை
முற்றிலுமுணர்ந்திடுகொண் டாட்டம் நெஞ்சின்
முன்னுகிறபோதுதொறுந் தென் மலையின்மேவுகுறு
முனிக்கும் அச்சஞ் செனிக்கும்

எத்திசையும்போற்றமர ரூரு மதி
லிந்திரன்கொலுவிருக்குஞ் சீரு மெச்சு
மிந்தநகரந்தனையடைந்தவர்க்கதுவும் வெறுத்
திருக்கும் அரு வருக்கும்.

துள்ளியெழுவெள்ளையலை மடங்கும் படி
சுற்றிலும்வளைந்தவகழ்க் கிடங்கும் பல
சொன்னமலைபோன்மதிலும் மின்னுவதினலேபுகழ்த்
தோன்றும் லோக மூன்றும்.

கள்ளவிழ்கடப்பமலர் வாகன் குறக்
கன்னியையணைக்குமதி மோகன் வளர்
கழுகுமலைநகரின்வளமையென்னுவிலடங்
காதே மட மாதே.

௬-வது, வேறுசந்தம்.

சென்னிகுளநகர் வாசன் தமிழ்
தேறும் அண்ணாமலை தாசன் செப்புஞ்
செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையிற்புனை
தீரன் அயில் வீரன்.

வன்னமயில்முரு கேசன் குற
வள்ளிபதம்பணி நேசன் உளை

வரமேதரு கழுகாசல பதிகோயிலின் வளநாமற
வாதே சொல்வேன் மாதே.

கோபுரத்துத்தங்கத் தூவி தேவர்
கோபுரத்துக்கப்பான் மேவி கண்கள்
கூசப்பிர காசத்தொளி மாசற்றுவி லாசத்தொடு
குலவும் புவி பலவும்.

நூபுரத்துத்தொனி வெடிக்கும் பதி
நுண்ணிடைமாதர்கள் நடிக்கும் அங்கே
நுழைவாரிரு முழவோசைக டிசைமாசுண மிடியோவென
நோக்கும் படி தாக்கும்.

சந்நதியிற்றுஜஸ் தம்பம் விண்ணிற்
றுவிவரு கின்ற கும்பம் எனுஞ்
சலராசியை வடிவார்பல கொடிசூடிய முடிமீதிலே
தாங்கும் உயர்ந் தோங்கும்.

உன்னதமாகிய விஞ்சி பொன்னுட்
டும்பர்நகருக்கு மிஞ்சி மிக
வுயர்வானது பெறலாலதி லதிசீதள புயல்சாலவு
முறங்கும் மின்னிக் கறங்கும்.

அருணகிரிநாவிற் பழக்கம் தரு
மந்தத்திருப்புகழ் முழக்கம் பல
வடியார்கண மொழிபோதினி லமராபதி யிமையோர்செவி
யடைக்கும் அண்ட முடைக்கும்.

கருணைமுருகனைப் போற்றித் தங்கக்
காவடிதோளின்மே லேற்றிக் கொழுங்
கனலேறிய மெழுகாய்வரு பவரேவரு மிகமேகதி
காண்பார் இன்பம் பூண்பார்.

ரு-வது. வேறு சந்தம்.

பொன்னுலவு சென்னிகுள நன்னகரண்ணாமலைதன்
புத்திரன் மகிழ்ந்து நித்தம் நின்றவன் முந்தி
வெந்திற லரக்கர்களை வென்றவன் மயில்

போலவேனலின் மீதுலாவுகி ராதமாதுமுனேகியேயடி
பூவையே யுனது தஞ்ச மென்றவன் அவ
ளீயுமானையு மென்று நின்றவன்.

மின்னுலவு சொன்னமுடி சென்னியணி விண்ணவர்தே
வேந்திரனுஞ் சித்தர்களுந் துன்னியே கதி
வேண்டியே யகத்திலன்பு மன்னியே பணி
வேலவன்கிரு பாகரன்குகன் மேவிடுங்கழு காசலந்தனின்
மிஞ்சியவ ளங்களைநா னுன்னியே சொல்ல
ரஞ்சிதமாக் கேளடிவிற் பன்னியே.

மூசுவண்டு வாசமண்டு காவின்மொண்டு தேனையுண்டு
மோகன முகாரிராகம் பாடுமே மைய
லாகவேபே டையுடனே கூடுமே யுலே
மோதுவாரிதி நீரைவாரிவிண் மீதுலாவிய சீதளாகர
முகில்பெறுஞ்சி கரமுற்று மூடுமே கண்டு
மயிலினஞ்சி றகைவிரித் தாடுமே.

தேசுகொண்ட பாரதந்த வீரதும்பி ராசியண்டர்
தேவதாரு வைக்கரத்தாற் பிடிக்குமே சுற்று
மேவியகிளைவளைத் தொடிக்குமே யொளிர்
சேயசந்திர னேடுரிஞ்சுப லாமரங்களி லேநெருங்கிய
திங்கனிம தாசத்தை வடிக்குமே மந்தி
பாங்கினின்ற தனையள்ளிக் குடிக்குமே.

அந்தரமு ருவிவளர்ந் திந்திரனு லகுகடந்
தப்புறம்போய் நின்றசையுஞ் சந்தன மரந்
தப்பிதமி லாதுகையால் வந்தன மெங்க
ளாறுமாமுக நாதனுக்கிடு மாறுபோலவி சாலமுற்றகொம்
பத்தனையு நின்றுதலை சாய்க்குமே யண்டப்
பித்திகைத னிலுஞ்சென்று தேய்க்குமே.

அந்தரத்தொ றுங்கிடந்து கந்தரம்பயந்தொதுங்கக்
கர்ச்சனைபு ரியுந்திரச் சிங்கமே நெஞ்சி
லச்சமுற விண்ணுறைமா தங்கமே தடங்
காவிலேசில தாவிலேவளர் மாவிருனடு வேகிராதர்கள்
கார்முகமெ யுங்கணைக ளேறுமே யதில்
வார்மதுவால் வாரியுவர் மாறுமே.

காலவடிவேனெடிய வாள்கொடிய நாகமுமிழ்
காரிபிணை வாரிகணை பானலே பன்ன
கூர்நயன வேடமின்ன ரேனலே காக்குங்

காலைமேலேறி போதுவார்கவ ணோடுமாமணி தேசுவீசவே
கதிரவன்றனதுமுகஞ் சுழிக்குமே பவன்
குதிரையுங்கண்ணைச்சுருக்கி விழிக்குமே
ஓலமலி கோலநீல வேலைசூழு ஞாலமீதி
லுற்றவரின்பத்துடனே வானமே செல்ல
வைத்தபலசித்திரசோ பானமே யென்ன,
வோங்குகோங்ககிணுங்கிலாங்கிலிபாங்குநீங்கருவேங்கைபூங்கமிழ்
ஒன்றேடொன்றுவம்புகொண்டு நீளுமே கோள்கள்
சென்றுசென்றுநின்றுநின்று மீளுமே. (௫)

௯-வது. வேறு சந்தம்.

புள்ளிக்கல மயிற் பாகன் சத்தி
புதல்வனுனகன யோகன் மலை
போலத்தான்றிரண்ட கோலப்பன்னிரண்டு வாகன் நல் விவேகன்.

வள்ளிக்கிசைந்தமுரு கேசன் அண்ணு
மலைக்கவிராஜன்மகிழ் நேசன் என்றும்
வாழுங்கழுகுமலை வாவிவளஞ்சொல்வேன் மாதே கேளிப்போதே.

வெள்ளைநாரைகொத்தும் வேளை தப்பி
மேற்கொண்டெழுந்துசின வாளை கதி
மீறிப்பாயும்தோறுந் திறிச்சாயும்தென்னம் பாளை யுடன் றழை.

தெள்ளும்பிள்ளையன்னப் பேடும் இளஞ்
சேவலானதுவு மூடும் பின்பு
தேமலர்த்தவிசிற் காமமுற்றவந்து கூடும் உற வாடும்.

மின்னிக்குலவிமதி மானும் வரி
வெள்ளைப்பணிலராசி தானும் மட
மின்னார்விழிகளென்ன மன்னுகெண்டைமுத்தமீனும் மட மானும்.

வன்னத்தாமரையைக் கண்டு வாயின்
மதுராகம்பாடிக் கொண்டு மதி
மயங்கிப்பேட்டினுடன் முயங்கியேகிடக்கும் வண்டு கள்ளை யுண்டு.

அந்தரத்துமின்போற் கூடிக் கொங்கை
யாலேநீந்திவிளை யாடிச் செல்லு
மன்னலார்நடக்கு நன்னடைக்குருகி யன்னஞ் செல்லும்பின்னம்.

மந்தமேதியுள்ளே யெட்டுஞ் சினை
வராலுமெழுந்துமே முட்டும் போது
மடிசுரந்துகன்றுதனைநினைந்துகண்ட மட்டும் பாலைக்கொட்டும்.

எ-வ, வேறு சந்தம்.

மரகதவிகசித வொளிதவழிருசிறை
மருவியமயின்மிசை யனுதினமுறைதரு வாசன் பவ நாசன்

குரகதசுகமணி வயிரதரடவிய
குவலயசாதா னெனுமதனனுமகிழ் கோலன் பரை பாலன்

பரிபுரவணிகல கலவெனவொலிபுரி
பரிதியுதயமதி லவிழ்மறைமலர்நிகர் பாதன் குக நாதன்

திரிபுரமவையொரு நொடிதனிலெரிகொடு
சிதைவுறநகைபுரிசிவன்மனமகிழுப தேசன் முரு கேசன்

பதுமநிதியினெடு பணிலநிதியுமெழில்
பரவியசுரபிய முறுசுரபுரன்மகள் பாகன் கன யோகன்

சததளநளினத விசுமிசைவதியொரு
சதுமுகவிதிசிறை யதிலுறநிறுவுவி சாகன் றட வாகன்

குரைதிரைவரைநிரை புரைதரவுலவிய
குரவையினடவுஞறநிருதரைமுடுகிய கோபன் கமழ் நீபன்

பரைசிவபகவதி யுதவியசாவண
பவனறுமுகருகன் மிசைமதுரிதகவி பாடுஞ் சுக நாடும் (எ)

அ-வது, வேறு சந்தம்.

பவனகிரிய தனுட்டானே மன்னுவானே பல
பாழிலேயலையாமலின்புற நாளுமேயருள்மேவிகண்கொடு
பாராய் இன்னல் தீராய்.

அவுணப்பகையைமுடித்தோனே புண்யவானே கதி
யாருமேதருவாருமிங்கில்லை யாதலாலருள்வாயினம்புரி
யாதே பன்னுஞ் சூதே.

விரகப்பெருவிதனத்தாலே மண்ணின்மேலே மனம்
வீணிலேயுழலாதுகந்தவி சாகனேபுரிநீயுவஞ்சமென்
மீதே யெண்ணிடாதே.

நரகச்சமன்வருமப்போதே பின்னில்லாதே பல
நாளுமேமற வாதுநின்சிறு பாதமாகிய சீதபங்கய
நானே உன்னினேனே.

நிமலப்பெருமிதச்செவ்வேளே கன்னல்வேளே தொடு
நீடுபாணமதான் மருண்டிடை வாடுமாதரிடங்கெடாவகை
நீயே யெண்ணு வாயே.

குமரிக்கதிகபார்கவனே நண்ணினனே யிகழ்
கோதிலாததபோபலம்பெறு நீதர்பாலக லாதுறைந்தருள்
கோவே யென்னுள்வாவே.

கடல்சூற்றியவுலகப்பாலே குன்னல்போலே
காயமாகியதீயவன்பினி மேவியதவியா மலன்பொடு
வேவே யென்னை யாவே

திடமற்றவனினுடைச் சேயே யென்னைநீயே திவ்ய
சேவையேசெயு ஞானபண்டிதர் நாவினாடினி தாவிளைந்திடு
தேனே பொன்ன னே.

கூ-வது, வேறு சந்தம்.

செந்தின்மாநகர்வாழ் கந்தநாதனிரு செய்யபாத கஞ்சமே நமக்
குய்யமேவுதஞ்சமே யின்று செப்புவது கொஞ்சமே கேட்கத்
தீயபாதகவி னோதமாயம்விட்டுத் திரும்புவாயே நெஞ்சமே.

பந்தபாசமிதைஎந்தவேளையினும் பார்க்கும்போதுதொல்லையேயல்லா
லார்க்குமாவதில்லையே யொரு பாரமேருவில்லையே கையிற்
பற்று நாதன்மாது பெற்றநீதன்மீது பனுவல்கூடு வல்லையே.

மங்கைமார்களிருகொங்கைதிங்கமத வாரணங்கொள்கும்பமேமுகம்
பூர்ணசந்திரவிம்பமே படமாசுண நிதம்பமே சதுரிடை
மாரவேளரசு மண்டபத்தருகில் வைத்தரண்டு கம்பமே

செங்கைசூரியோதய மங்குலாவமலர் சிதபத்மதளமே வாயி
லோதுசொற்கள்குளமே யிதழ் திவ்யபொற்பவளமே யென்று
சிந்தித்தாற்குமரன் கந்தபாதமலர் சேர்வதெவ்வா றுளமே.

வன்னமானவிழி மின்னவேகடையில் வக்ரதந்த சங்கமே கொண்ட
வுக்ரதுங்கசிங்கமேயென்ன மறலிதூதர் பொங்கமே யுற்று
வந்தவேளைநெஞ்சே கந்தவேளைநின் மருவுறுது பங்கமே

சென்னிமாநகரண் ணமலைக்கவிஞன் நேமிங்கு மிசையே பெறப்
பேசுசந்த மிசையே சற்றுந் தீர்ந்திடாதநசையே வைத்த
சேவலாளிபத மாவலோடுபணி தினமுநூறு வுரையே. (கூ)

௧0-வது, வேறு சந்தம்.

பாதிராத்திரி வேளையில்வீட்டுப் பக்கத்தில்வந்து மேவிப் பஞ்ச
பாதகனொரு பாவி சிறு பாவையை மெள்ளக்கூவி கையைப்
பற்றிக்கூட்டிக்கொண் டேகினான்பதை பதைக்குதேயென்ற ணவி.

சோதனைப்பிரகாரமா யென்னைத்தொடர்ந்துதேபெருந்தோஷ மெவர்
சூதினால்வந்தமோச மினித் தொலையுமோ பிள்ளைப் பாச மிதைச்
சுற்றத்தாரறிந் தாலெனக்குமுன் சொல்வாரோ பரி யாசம்.

தேனிலங்கிய காவனந்திகழ் சென்னிமாநகர்வாசன் துதி
செய்யும் அண்ணாமலை தாசன்செப்புஞ் செந்தமிழ்த்துணேசனுரு
சிந்தனை செயுந் தொண்டர் தீவினை தீர்த்திடுமுரு கேசன்

நானிலம்புகழ் கழுகுமாமலை நாயகன்பாண்டி நாட்டில் நெஞ்சி
னணம்விட்டுத்தான்பாட்டில்வைப்ப நண்ணியபாலைக்காட்டின் மகள்
நடக்கவேண்டிமுன் னடக்கமாத்தெய்வம் லபித்ததோமண்ணட யோட்டில்.

மையல்கொண்டொரு பையல்பின்செல வயதுமீறின மாதோ இந்த
மார்க்கந்தோன்றின தேதோ சென்ம வாசனைப்பல னீதோ ஐயோ
மாதம்பத்துஞ்சுமந்துபெற்றவென் வயிறுந்தானெரி யாதோ.

செய்யபஞ்சணை யும்பொறுது சிவந்துகொப்பள மாகு நெரிஞ்
சிப்பழமென்று நோகு மவள் சீறடிரண்டும் வேகும் படி
தீயுங்கானலிற் காயும்வேனிலாந் தீயி லெப்படிப் போகும்.

தேடினுங்கிடை யாததாகிய திரவியக்கருவேலம் போலே
செனித்தபெண்ணுக்குச்சீலம் வேறேதிரும்பினதென்னகாலங் கொங்கை
திரண்டிடாமுன்ன மருண்டிடற்கெவன் செய்தானோ விந்திர ஜாலம்.

காடுசேரையிற் கரடிவேங்கைகள் காட்டுமே யாராரா மதைக்
காதிற்கேட்டுவிசாரம்வைத்துக் கலங்குவாரந்த நேர மென்றன்
காதலிதன்னை யாதரித்துயிர் காப்பதுவேலன் பாரம். (௧0)

௧௧-வது, வேறு சந்தம்.

நேசமாப்பணியண் ணாமலைக்குதவு நீதனைக்
கழுகுமலை நாதனை நெஞ்சில்
நினைக்கநினைக்க மீறி யெனைக்கொல்லுதே காம வேதனை.

கோமளக்கடலி லேமிகுத்த திரைக் கூட்டமே
மன்தனும் போராட்டமே செய்து
கோரமேவிளைத்தாற் றீருமோவெனக்கு வாட்டமே.

வெள்ளைத்திரையின்மேலே துள்ளித்திரியுஞ்சுறு மீனமே
யினியுமுண்டோ மானமே கொங்கை
வீக்கம்கொண்டதனுலேற்குதிலே யன்ன பானமே.

அள்ளற்கழிக்கரையுண் மெள்ளக்குலவிவரு மாமையே
கொடியகாமத் தீமையே நாளு
மதிகரித் திடலா லவமதிக்குந்திந்த சீமையே.

பொங்கு மதுமலர்க ளெங்கும் பரிமளக்கும் புன்னையே
பெற்றுவளர்த்த வன்னையே யெந்தப்
போதும் வைதுவைது மோதுகிறுள் பாவி யென்னையே.

தங்கு நித்திலம்புரி யிங்கித வலம்புரிச் சங்கமே
தென்றலு மொரு சிங்கமே போலத்
தாக்கவே மயங்கி யேக்கமா மெலிந்தே னங்கமே.

மங்கை மார்கள் தரங்க ணேர்பவள வல்லியே
பிரியேனென்று சொல்லியே போன
வாசக்கடம்பன்வர நேசத்துடன்சொல்லுமோ பல்லியே.

அங்கயத்தினிலுறை பங்கயத்துள்ளுறை யன்னமே
பிரியம்வைத்து முன்னமே கட்டி
யணைத்தவேன்முருகன் றனைக்கண்காணேனையே யின்னமே. (கக)

கஉ-வது, வேறு சந்தம்.

ஆறுமுகவடி வேலவனேகலி யாணஞ் செய்யவில்லை- சுற்று
மச்சமில்லாமலே கைச்சரசத்துக்க ழைக்கிறுயென்ன தொல்லை.

மீறிய காமமி லாதபெண் ணேடேவி ளப்பதே வீண்பேச்சு சும்மா
வெள்ளைத்தனமாகத் துள்ளுகிறுய் நெஞ்சில்வெட்கமெங்கேபோச்சு.

மேட்டிமை யென்னிடங் காட்டுகிறுயினி வேறில்லையோசோலி யிதை
வீட்டிலுள்ளார்கொஞ்சங் கேட்டுவிட்டாலது மெத்தமெத்தக்கேலி.

தாட்டிகஞ் சேர்கழு காசல மாநகர் தங்கு முருகோனே- யிந்திர
ஜாலத்தி னுலென்னைக் காலைப்பி டித்தாலும் சம்மதி யேனனே.

அக்கரைக் கார்க்குப் புத்திகொஞ்சமென்பா ராம்பழமொழியே — நீ
யப்படி யென்னைப்ப லாத்காரஞ் செய்திடி லாச்சுது பெண்பழியே.

சக்கரைக்கட்டிபோல் வள்ளி தெய்வானை யாந்தையலுனக் கிலையோ கொ
ண்டுதையலரைச்சேரும் மையலுனக்கென்ன தானுமொரு நிலையோ.

அம்புவி யிற்சிறுபெண்களின் மேலுனக் காசையேன் காணுதையா-நீ
யாக்கப்பொறுத்தாலு மாறப்பெறுதவ ராகவே தோணுதையா

நம்பு மண்ணுமலை தாசன் பணியுந வினமலர்ப்பாதா கொஞ்சி
நாளைக்கு மேலொரு வேளைக்கு லீலை நடத்தினலாகாதா. (கஉ)

கந-வது, வேறு சந்தம்.

கண்ணு யிரம்படைத்த விண்ணூ ரிடந்தரித்த
கனவியி ரப்படை யவன்மக ளைப்புணர் சுத்தனே திருக்
கழுகுமலைப்பதி யனுதினமுற்றிடு சுத்தனே.

அண்ணும லைக்கிடர்க ளண்ணு தொழித்துமிக
வகமகி ழுத்தன தருளை யளித்திடு மையனே திசை
யரவமும் வெட்குற மயிலை நடத்திய துய்யனே.

மின்னே கமலமலர்ப் பொன்னே வெனப்புகல
விகசித ரத்தின நகைக டத்தொளிர் மெய்யினள். கதிர்
விரவிய சித்திர வளைய லடுக்கிய கையினள்.

என்னேரமு மனதி லுன்மீதி லேமையல்கொண்
டெழுதிய சித்திர மெனமவுனத்தினி லிருக்கிறாள் வள்ளத்
திடுகிற புத்தமு தினையும் வெறுத்தரு வருகிறாள்.

கும்பத்தி னைச்சினந்து வம்பைப்பி ளிர்த்தெழுந்து
கொடியிடைமுற்றிநு மொடிய வளைத்தது கொங்கையே மணங்
குலவுகடப்பினி னினைவது வைத்தனள் மங்கையே.

செப்பொற் சிலம்புகள் புலம்பப் பெருந்திருவிற்
றிகழ்தரு சிற்றில்கள் புரிவதை விட்டவ டியங்கினள் உன்றன்
றிருவழ கைக்கரு விழியு ளிருத்தியே மயங்கினள்.

போராடு தற்குரிய கூரார் மலர்க்கணையெய்
புகழ்பெறு சித்தச தனுவதனைப்பொரு புருவத்தாள் தவம்
புரிபவ ரைத்தன தழியில் விழப்புரி பருவத்தாள்.

சீராக மெத்தைதனில் நேராக வைத்துனது
திருவத ரக்கனி யிதழை யருத்திமே சேரையா யிந்தத்
தெரிவை யுளத்துனை யலது பிடித்தவ ராரையா. (கங)

கச-வது, வேறு சந்தம்.

பூமிமெச்சிடுமண் ணுமலைக்கோர்துணை யானவன் தினைப்
மயில் வானவன் ஒரு கானவன் எனப்
புனத்தைக் காக்கும்வள்ளி தனத்தைப்பார்க்க மெல்லப் போனவன்.

[illegible]ற்றகமு காசலேசனேயே தேடுதே
ம[illegible]ாடுதே காறள் ளாடுதே யிரு
செங்[illegible] தங்கிநின்ற சங்கி னங்கள்கழன் றோடுதே.

தென்றலானபுலி வந்துகோபமொடு சீறுதே
த[illegible]றுதே யிதழ் மூறுதே மெத்தத்
தீமையாமிருளிற் காம லாகரியு மீறுதே.

குன்றமானமுலை ரண்டுமோர்பில்விம்மிக் கொண்டுதே
தேமஞ்மண்டுதே வெப்புங் கண்டுதே மலர்க்
கொம்புபோலமென் மருங்குலானதுந்து வண்டுதே.

உள்ளமெல்லமெல்ல லீலைசெய்யநினேந் துருகுதே
முத்தங்கருகுதே கண்ணீர் பெருகுதே என்ற
னுச்சிக் கேறிக்காமப் பித்தங்கிறுகிறென்று வருகுதே.

வள்ளமேவுபசும் பாலுந்தேனுமரு வருக்குதே
கசந்திருக்குதே துன்பம் பெருக்குதே வன்ன
வாருந் தாறுமாறுக் கீறவே தனங்கள் பருக்குதே.

பாரமானகொங்கை யோரம்வேடனம்பு பாயுதே
யுடற்றேயுதே மலர் தீயுதே கொடும்
பாவியானமதி யாவி சோரவந்து காயுதே.

மாரவேளினுல் கோரமானகாம வாவையே
யெனுந்தீதையே தீரத் தூதையே சொல்லி
வாட்டந்தீர்குகனைக் கூட்டிவாடியடி கோதையே. (கச)

கரு-வது வேறு சந்தம்.

சந்தவரை வந்தகுக நாதா பரை
யந்தரிமனோன்மணியா மாதா தந்த
சண்முகசு டாட்சரிவி நோதா
குழைக் காதா சூரர் விரோதா வன
சஞ்சரிவெண்குஞ்சரிச நேதா

149618

செந்தமிழண் ணமலையை யாளாக் கொண்ட
கந்தவரவிந்தமலர்த் தாளா கட்க
சிந்திடுகடம்பணியுந் தோளா
நெடு நாளா மற வாளா வுனைத்
தேடொர்குயிற் பேடுருவங் கேளாய்.

சுந்தரமிகுந்தகுழன் மேகம் அவள்
சொந்தநு தலிந்துவிலோர் பாகம் திருந்
தும்புருவம் வில்லோடுசி நேகம்
தவயோகம் வென்ற னேகம் வஞ்சந்
துஞ்சுவிழி நஞ்சினிலும் வேகம்.

சந்தமலி கின்றமுக மிந்து வள்ளைத்
தண்டுசெவி யென்பதுவே தந்து கன்னம்
சாணைநுனி நாசியின்ப சுந்து
மதுச்சிந்து தல்பொ ருந்துஞ் சிறு
சண்பகந்துப்பாமிதழ் சிவந்து.

செங்குமுத புட்பமதை யொத்து மொழித்
தேனுதவும் வாய்நகையோ முத்து கண்டஞ்
சீதரனு ரூது வர நத்துச்
சொற்றித் தித்துப்பாகைக் கைத்து விடச்
செய்யுமெனவுன்னலா முளத்து.

குங்குமவா கங்குசகோ தண்டம் உன்கைக்
கோமகா யாழுவமை விண்டம் கையைக்
கோகனக மோவெனம ருண்டம்
ஆழிமண்டங்குலி கண்டம் நெருங்
குங்களிறு கிறுகிளித் துண்டம்.

கட்டுகதிர் பட்டுமணி வம்பு கிழி
பட்டுவழி விட்டிடவெ ழும்பு கிற
கட்டழகாம் வட்டமுலைச் சொம்பு
யானைக்கொம்பு சிவ சம்பு குடங்
கைக்கும்வளையாதபொற் பறம்பு.

மட்டுமிழ் பசுந்துளப மாலே செங்கண்
வளருகிற தவிசெனுமொ ராலே சிறு
வயிறுமயிர் சிற்றெறும்பு போலே
விரை வாலே வெள்ள மேலே சுற்றி
வந்தசுழியுந்தியிடை நூலே.

தரமரவ படமெனல்கு லுண்டு இடை
தங்கநிறச் செங்கதலித் தண்டு முழங்
தாட்குவமை கேட்கிலவை நண்டு
இனை கொண்டு வளர் பெண்டு வராற்
கண்டைக்கணைக் காலெனுமி ரண்டு.

பரடுதரா சுயர்குதிகங் துகமே யணி
பறவுபுற வடியிணைபுத் தகமே கடற்
பவளமதி தசவிரல்கள் நகமே
யம்பொ ருகமே பத யுகமே மயில்
பண்ணுமிளஞ் சாயலையா சகமே.

மேனகையோ டுருவசியிந்த்ராணி செல்வ மிக்க
திருமுக்ய கலை வாணி இந்த
மின்னாசி தன்னுருவங் காணி
நெஞ்சு நாணி மலர்ப் பாணி தலை
மீதுகுவித் துத்தொழுவார் பேணி.

சேனையொடு வந்துகருங் காவி யம்பைச்
செய்யகருப் புச்சிலைவைத் தேவி சண்டை
செய்யுமொரு மன்மதனும் பாவி
எங்கடேவி யிடமேவி யுட லாவி தனைத்
தீர்க்குமுனங் காத்திடுவாய் மேவி. (கடு)

கசு-வது, வேறு சந்தம்.

வன்னத் தினைமாவைத் தெள்ளியே யுண்ணும்
வாழ்க்கைக் குறக்குல வள்ளியே யுயிர்
வாங்கப் பிறந்திட்ட கள்ளியே யிரு
வடமேருவை நிகராகிய புயமீதணி பலமாமணி
மாலை படிரெனத் துள்ளியே விழ
வான்மதி வீசுந்தீ யள்ளியே.

கன்னத்தினிற்குயிற் சத்தமே கேட்டுக்
கன்றுதுபா ரென்றன் சித்தமே மயக்
கஞ்செய்யு தேகாமப் பித்தமே யுடல்
கனலேறிய மெழுகாயின தினியாகிலு மடிபாதகி
கட்டியணைத்தொரு முத்தமே தந்தாற்
கைதொழுவேனுன்னை நித்தமே.

வாடியிருப்பது வஞ்சமோ பொல்லா
வன்கருங்கல்லோ வுன்னெஞ்சமோ கொண்ட
மையற்பயித்தியங் கொஞ்சமோ சிலை
மதனுகம முதுகாவிய மதிலேமொழி சுகலீலையின்
மார்க்கமுனக்கென்ன நஞ்சமோ ஒரு
வார்த்தையுரைக்கவும் பஞ்சமோ.

தேடக்கிடையாத சொன்னமே வுயிர்ச்
சித்திரமேமட வன்னமே யரோ
சிக்குதுபாறயி ரன்னமே யொரு
சிலைவேள்கணை கொலைவேலென விரிமார்பினி னடுவேதொளை
செய்வது கண்டிலை யின்னமே என்ன
செய்தேனோநான்பழி முன்னமே.

கஎ-வது, வேறு சந்தம்.

செந்தின்மா நகரந்தனில்மேவிய
தேசிக னுமுரு கேசன் மயில்
வாசியி லேறுமுல் லாசன் சிறு
திங்களும்பண சங்கமாசுண முந்துலங்கிய கங்கையாளொடு
செஞ்சடாடவி மீதணிவார்செவி
சேரமுன்னோதும்ப தேசன் அடி
யார்தமை யாள்விசு வாசன்.

எந்தநே ரமும் வந்தனை செய்தடி
யெண்ணும் அண்ணமலை தாசன் றுதி
பண்ணுமெய்ஞ்ஞானவி லாசன் என்னோ
டிந்தெழுந்துத யங்குமாலையில் வந்துவண்டுமு ழுங்குசோலையி
லின்ப சாகர மாகிய லீலைக
ளன்புடனேசெய்தான் மானே அந்தச்
சம்ப்ரமமென்னசொல் வேனே.

மங்கைமார் பல ரும்புடைசூழ்தர
மாமலர்கொய்திடச் சென்றேன் அங்கோர்
பூமரத் தேதனி நின்றேன் சந்த்ர
மண்டலங்களை வென்றவாஞன மைந்தொடொன்றுமி குந்தவார்மது
வண்டலோடுக டம்பெனுமாரமும்
வாரமுந்தோன்றிடச் சேர்ந்தான் என
தைரைபார்த்தே களி கூர்ந்தான்.

பங்கயாசன மேலுறை நான்முகப்
பாதகனுமலர்க் கைதான் கொண்டுன்
சோதியையெப்படிச் செய்தான் அடி
பஞ்சுரஞ்சினு மஞ்சுசீரடி கொஞ்சுரஞ்சித வஞ்சியேபுவி
பட்டுநீநிலே நிற்கவொண்ணுதென்று
பன்மலர் மெத்தையொன் றிட்டான் பின்பு
மென்மேல்வந்தென்கையைத்தொட்டான். (கஎ)

கஅ-வது வேறு சந்தம்.

கன்னல்சூழ்பழ னம்புடைசூழ்கழு
காசலந்தனில் வாழ்பிர தாபனே
கனவாசமெங்குங் கமழ்கின்ற நீபனே வளர்
காதலோடிரு போதிலும்பல போதினற்பணி வார்மனத்துறை
காரிருட்குவை நீக்கிய தீபனே
சூரபத்மனைத்தாக்கிய கோபனே.

சென்னிமாநகர் வாழும் அண்ணலை
செப்புஞ்செந்தமிழுக்கதி நேசனே
சிவசுப்பிரமண்யனெனும்பிர காசனே கொடுஞ்
சிந்தைதைநைந்துபு லமபிநின்றிரு மந்திரந்தனில் வந்தடைந்துனைச்
சேவிக்குங்குணமென்றனக் காகுமோ
பாவிக்குதுயரெப்படி போகுமோ.

வந்தவர்க்குப் பழப்புளிக் காடியே
தந்திடச்சகியார் தமைத் தேடியே பிர
பந்தமெத்தனை யெத்தனை கோடியே குலே
வாழையின்பழ மோகனிந்திடு மாழையின்கனியோ வெனும்படி
மதுரிதம்பெறவேநிதம் பாடியே யொரு
பரிசும் பெறுதுளம் வாடியே.

வெந்தரைக்குள் வெடிப்பிடைப் பாலையே
சிந்து பித்தரைப்போல்வெறும் வேலையே செய்யும்
வீணானென் விளங் குன்றண்டைக் காலையே எந்த
வேளையுந்துதி கூறவுந்துயர் நீளுவெப்பவ மாதவம்புரி
வில்வவேணிசேர்கற்பக வாலையே
செல்வனேயெனுங் கற்பகச்சோலையே. (கஅ)

ககூ-வது வேறு சந்தம்.

செந்தூர் வளர்முருக நாதா அருணா
செந்தாமரைநிகரும் பாதா திருச்
சிந்தையிலண்ணாமலைசெய்
நிந்தையையெண்ணா தருள்செய்
சித்திரவேற்கரவி னோதா வுனதுவஞ்சச்
செய்கை யின்னமுந்தெரி யாதா.

சந்தோட மாகவேபோய் வீடு தோறு
சரசங்கொண்டாடுவதே பாடு வந்துன்
றன்னுடனேசேர்பிரியக்
கன்னியர்கள் பேர்வரியச்
சகஸ்திரம்வேணுமேவெள் ளேடு தனித்தோரிடந்
தங்கியே மேயுமோவெள் ளாடு.

வேசையர் வாசலிலே சென்று தம்பலங்களை
வெட்கமில்லாமல்வாங்கி மென்று தின்று
மெத்தப்பயித்தியங் கொண்டு
சுற்றித்திரிந்தே மருண்டு
வீடுதேடிவந்தாயே இன்று தொடவேமாட்டேன்
வேணுமென்றாகிலும்போடு கொன்று.

ஆசைகொண் டவருக்கு ரோஷங் கிடையாதென்பார்
அப்படிக்காகில்விசு வாசம் வைக்கும்
அந்தவிலைப்பெண்டுகளைச்
சொந்தமெனக்கொண்டனையே
யானுமுன்னைப்போலே மோசம் போனவருண்டோ
ஆருஞ்செய்கிறாரோ பரிகாசம்.

கந்நாசெய் யாதேபல வந்தம் புதுமலரைக்
கசக்கியறிவார்களோ கந்தம் சற்றுங்
காதலிலாமற்சினந்த
மாதைவலியப்பிடித்துக்
கலந்தால்வருமோசுகா னந்தம் உனக்கெனக்குங்
கனவிலுமில்லையினித் தொந்தம்.

எந்தப் பிறப்பினுமே வல்லி யுனையல்லாமல்
எவளையுஞ்சேரேனென்று சொல்லி யூரில்
எந்தனைபரத்தையரோ
நித்தமுமணைத்தனையோ
இப்படிக்காசி காஞ்சி டில்லி கன்யாகுமரி
எங்கும்பார்த்தாலுமில்லை சல்லி.

கங்கு கரையில்லையே ஜாடை சொல்லிவைபவர்
கட்டுகிறாயேயெதற் காடை மானங்
காக்கவல்லவாவென்பாலே
சேர்க்கையிலாதேயன்பாலே
காந்தாயேவேசைமாதர் மேடை கைவசமாமோ
கலப்புல்லுத்தின்றாலுமே காடை.

குங்குமஞ் சந்தனஞ்ச வாது கதம்பங்
குமுகுமென்றேபுயத்தின் மீது வாசங்
கொட்டுதெழி னெற்றிசந்தப்
பொட்டொடுபகட்டுதிந்தக்
கோலம்புதிதாய்வந்த தேது நடந்ததெல்லாங்
கொஞ்சஞ்சொல்வாய் பண்ணுதே சூது. (கக)

உ0-வது வேறு சந்தம்.

பாளைவாய் கமுகில்வந்தூர் வாளைபாய் வயல்சூழ்செந்தூர்
பாலனம்புரியவந்த புண்ணியா போகங்
காலையுஞ்செய் கிறாய்முன் பின் னெண்ணியா.

வேளையோ விடிந்துதையா நாளைவாரே னின்றுகையை
விட்டிடென்றா லும்விடாமற் பிடிக்கிறாய் பாலை
யொட்டவேமடுவெரிந்து குடிக்கிறாய்.

நித்தமும் அண்ணாமலைசெய் குற்றமெண்ணா வேலாகண்டோர்
நின்னிதழ்ப்ப வளங்களில் வெள்ளையேதென்றா
லென்னசொல்வே னாளொருபெண் பிள்ளையே.

மத்தகரி கர்தனத்தின் மெத்தநக ரேகைபட்டு
மாலைப்பிறைபோலனந்தந் தோணுதே பிது
கேலித்துறையாகுமென்று நாணுதே.

உன்னையும் விவாகமில்லா வென்னையுமே யன்னைக்கண்டா
லொன்றுஞ்சொல்விடாளோ அடா(ர) பாவியே யின்று
தின்றிடுவேனென்பாள்பச்சை நாவியே.

சன்னைசாடை யாகவந்தென் றன்னையணை வாய்நீயென்று
சாற்றிடுமென் னுண்மையான சொல்லையே விட்டுக்
கூற்றுவன்போல்வந்தாயென்ன தொல்லையே.

சாறுசேர்க ரும்புருசி யாயிருந்தாலும் வேரோடே
தான்பறித்துத்தின்னுவது ஞாயமோ முழு
ஆண்பிள்ளைக்கிறுதான்சம்பிர தாயமோ.

நூறுதர மாறிமாறி வேறுவேறு லீலைசெய்தால்
நோகுமோநோ காதோவெனக் குள்ளமே கொண்டு
போகுமோகி ணற்றுநீரை வெள்ளமே. ௨௦

௨௧-வது, வேறுசந்தம்.

என்னடிநான்பெற்ற மங்கை யிருகொங்கை களிற்சங்கை யெண்ண
வெத்தனைகோடியோ செங்கை விர
லிடமேவளர் நகரேகைகள் மிகவேபடு வகைதோகையி
லேய்ந்தமுருகவேள் கிள்ளி யுனைத்
தோய்ந்ததோ சொல்லடி கள்ளி.

அன்னவயற் செந்தூர்வாசன் மந்தகாசன் அன்பர்நேசன் நாளும்
அண்ணாமலைக்கவி ராசன் பாடும்
அமுதச்சுவை தருமுத்தமிழ் களபத்தொடு கமழ்பொற்புய
அற்புதவேலன்செய் ஜாலம் தன்னாற்
கற்பழிந்தாயோவிக் காலம்.

சித்தசன்கொக்கோக நூலை யந்திமாலையொடு காலை வைத்துச்
சிந்திப்பதாச்சு துன் வேலை சிமிழ்
சின்னத்தன மடவஞ்சியே யுன்னைப்பணி வொடுகெஞ்சியே
சேவற்கொடியோன்பூஞ் சோலை தணிற்
றேடிப்புரிந்தானோ லீலை.

மெத்தப்பிரமைகொண் டேங்கி கொங்கைவீங்கி நேசப்பாங்கி மாரை
விட்டுத் தனியாக நீங்கி வடி
வேலுக்கதி பதிமையலே மேவிட்டலறியதையலே
வெட்கத்தைப் போக்கடித் தாயோ காசு
வேசைத்தனம் படித் தாயோ.

இன்னம்விவாகமேயில்லை கமழ்கொல்லை வெடி முல்லை குழ
லெங்குஞ் சிங்காரித்து வில்லை சந்த
மினிதாகிய களபந்தனை கனமேருவிலணிகின்றனை
இப்படியே தலை விதியோ பெண்ணே
செப்படியேயிது மதியோ.

சன்னதமாங்காமப்பேயே பிடித்தாயே வேப்பங்காயே போலச்
சாதம்வெறுத்தாயே நீயே பெருஞ்
சண்டாளியே கண்டோர்திகழ் கொண்டேபழி விண்டார் நம
சாதிக்கெல்லாமொரு வடுவே வரத்
தான் பிறந்தாய்வந்து நடுவே.

வண்ணம்பயிரவிதோடி ராகம்பாடியுற வாடிச் சப்ர
மஞ்சத்திலேசென்று கூடி யுன்றன்
வன்னப்படி கம்போலொளிர் கன்னத்தினி லுங்தேனிதழ்
வாயினுங் கொஞ்சப்பற் குறியோவைத்தான்
வாலைமகனுக்கும் வெறியோ.

எண்ணங்குமரவேள் பாலே சென்றதாலே யினிமேலே வயி
றெப்படியாகினுஞ் சூலே வரு
மென்றேயென தளமஞ்சுது நன்றேசொலி லென்வஞ்சக
மில்லைக்கிழவன்சொல் வீணைக் காரர்க்
கேற்காதென்று லுங்கண் ணுணே. (உக)

உஉ-வது வேறு சந்தம்.

மஞ்சுநிகர்குந்தள மின்னே சததளங்கள் விகசிதஞ்செய்
வாரிசாதனத்தில்வாழ் பொன்னே செய்ய
வன்னமே யொளிர்சொன்னமேநடையன்னமேயிடைபின்னமேபெற
வந்ததனபார வஞ்சியே யதிவிருப்பத் துடனுரைக்கும்
வார்த்தையைக்கேளாசை மிஞ்சியே.

அஞ்சுவயதான பருவந் தனிலெனது சிறுமனைமுன்
அங்கஜவேள்போலே யுருவம் பெற்றே
அன்றுவந்து நயந்துமாலையி னெஞ்சழிந்தும யங்கவேபுணர்
ஆறுமுகவேல வனையேநினைவுகொண்டே மதிமருண்டே
ஆறுதில்லையென்ன வினையே.

சென்னிகுளமேவிய வாசன் இனியதுதி யனுதினமுஞ்
செய்திடும் அண்ணாமலை தாசன் பாடுஞ்
சிந்துமீதுமி குந்தமோகமு றஞ்சுசீலகுகன் சரோருக
திவ்வியமுகங்க ளாறுமே கண்களிற்கண்டால் பெண்களுக்கெல்லாஞ்
செவ்விதழும்வாயு முறுமே.

காவடிச்சிந்து-முற்றிற்று.

நீங்காத இன்பதனைத் கொடுக்குந்தன்மையது, ஆதி முதல் அந்தம்வரையில் மிகச்சாமானிய எளிய தமிழ் வசன நடையில் எழுதப்பட்டிருப்பதால் சாமானிய படிப்பினையுடைய நம்பெண்மக்கள் கூட வாசிக்கலாம் ஆண்மக்கட்கும் இன்பத்தைத் தரவல்லது.

இதன் விலை அணு 6. வி-பி. சார்ஜ் அணு 2.

மோகன சுந்தரி.

(ஓர் நவீநக தமிழ் நாவல்)

உலகத்தில் மாற்றாந்தாயாக வருபவள், முதற்றாரத்தினுடைய மக்களைப் படுத்தும்பாடு இவ்வள வவ்வளவல்லவென்பதை அனுபவிகள் அறிந்தே யிருப்பார்கள். உலகத்தில்நடக்கும் மாற்றாந்தாயின் அக்கிரமத்தைப்பற்றியே இக்கதையில் எழுதியிருக்கிறது.

காந்தாரியென்பவள் முதற்றாரமனைவியின் மகனாகிய மாசிலாமணி யென்பவனை உயிரோடு சித்திரவதைசெய்வதும், இவன் துக்கப்படும் விதமும் பின்பு யாத்திரைசெய்வது, மாசிலாமணிக்கு ஆபத்துநேர்தல், திருடன் மனோன்மணி யென்பவளின் கற்பைத் தந்திரமாகக் கெடுத்தல் முதலிய அரிபவிஷயங்கள் இதில் வெகுரஸமாக எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணு 6,

மருந்துகளின் எடை விபரங்கள் ஔஷதம் செய்யும் இடங்களின்விபரம் கல்வங்களின் பேதாபேதங்கள் கியாழம் சாப்பிடத்தக்க பாத்திரங்கள் இன்னின்னவை யென்பது ரோகிகளுக்கு அவுஷதம் கொடுக்கும் கால நிர்ணயம் அக்கினி லக்ஷணமென்னும் புடம் போடும்விதம் ஔஷதபேதங்கள், வியாதியஸ்தர்கள் சாப்பிடக்கூடிய பதார்த்தவிபரம் ஜீரண சக்தியைக்கொடுக்கும் பதார்த்தங்கள் வஸ்துக்களுடைய விபரங்கள் அறியும்விதம். இப்புத்தகத்தை அனேக வித்வான்களாலும், அநேக டாக்டர்களாலும், அனேக அனேக முறை பார்வையிடப்பட்டது. இப்புத்தகம் மானிடராகப்பிறந்த யாவருக்கும், அதிக முக்கியமான தாகையால் அவசியம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொருபுத்தகம் இருக்கவேண்டும் என்பதாக யாவரும் ஒப்புக்கொண்டதற்கு சில வித்துவான்கள் கொடுத்த சாற்றுக்கவிகளும் அடங்கியுள்ளன. இப்புத்தகமானது நம்மிடத்தில் அச்சடித்து தயாராகவிருக்கின்றபடியால் உயர்ந்தபதிப்பு காலிகோபைண்டு செய்தது.

புஸ்தகம் 1-க்கு அணு 10. வி-பி-சார்ஜ்-அணு-3.

நூதன புத்தக விளம்பரம்.

நந்திவாக்கியம்.

என்னும் சோதிடசாஸ்திரம்.

(இரண்டாம்பாகம்.)

ஆழிசூழுலகத்தின்கண் ணுள்ள ஆரிய நண்பர்கள் அனைவருக்கும் சோதிடர்களுக்கும் இன்னும் மற்றுமுள்ள கனதனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—இதுகாறும் அனேக சோதிடசாத்திரங்களையும், ஆருட சாத்திரங்களையும் கண்ணுற்றுக் களிப்படைந்திருந்தபோதிலும் இந்த நந்திவாக்கிய மென்னும் சோதிட சாத்திர மிரண்டாம்பாகத்தில் கூறும் அதிகாச்சரியமுள்ள பலன்களடங்கிய இவ்வரிய நூலைக் கண்ணுறுக்கமின்றி இப்பத்திரிகைகள் மூலம் எடுத்தோத முடியாதென்பது திண்ணமே யாம். ஆயினும் இந்த நூலில் சொல்லும் சிலவற்றை மட்டும் தெரியப்படுத்துமவையாதெனில்;—

சில காலங்களுக்குமுன் இந்த நூலின் முதற்பாகத்தில் சிலவற்றோடு மேட லக்கினமட்டும் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது இப்போது பல்லோர்களுக்கும் உபயோகமாகும்பொருட்டு மற்ற 11-லக்கினபலன்களும் இதுவரையிலும் எந்தநூல்களிலு மெடுத்தோதாத, மிகத்தெளிவாயும், சூக்ஷமாயும் சொல்லக்கூடிய அதிக அருமையான ஆருடபலன்களும், மனைமுகூர்த்த லக்னபலன்களும், மனைக்குக் கிரகமடைக்கும் விபரங்களும் இன்னும் சில பலன்களுடனும் சேர்த்து ஒரே கட்டமாக பதிப்பித்து அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது:—இந்த நூல் ஒன்றைமட்டும் யாதாமொருவர் கருத்திலுன்னிக் கைக்கொண்டு வருபவர்களானால், அம்மஹானுபவன் மிகவும் சிறந்த பண்டித னுவானென்பதற்கு யாதொரு தடையுமிராது.

தவிர இந்தநூல் மிகவும் அருமையானதென்பது முந்தி அச்சிட்டு வெளிவந்திருக்கு மின்னூலின் முதற்பாகத்தால் யாவருக்கும் நன்றாய்த் தெரியவரும்.

கிளேஸ்கடிதம் உயர்ந்த கலிகோபயிண்டு விலை ரூபா. } 1—8—0

பதிவிரதைகள் சரித்திரம் இரண்டாம்பாகம்	0-12—0
மைமனுவதிக்கதை	0-12—0
மனோரஞ்சனி	0-12—0
பங்கஜவல்லிக்கதை	0—8—0
தற்காலவைத்தியபோதினி	0—8—0
மோகனசுந்தரி	0—6—0
சுந்தராங்கி	0—6—0

விலைப்பட்டி கேட்க வேண்டுபவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

எஸ். ஆர். இராஜாராம் அண்டு கம்பெனி.
வேப்பேரி போஸ்டு, மதறாஸ், என். சி.

144618
600 008